நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பட்டுக்கோட்டை.
முன்னிலை – திரு. த.சுதர்சன்.,எம்.ஏ.எல்.எல்.பி.,
நீதித்துறை நடுவர், பட்டுக்கோட்டை.
2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ம் நாள் புதன் கிழமை
ஆண்டு பட்டிகை வழக்கு எண். 40/2022
CNR.No.TNTJ11-000439-2022

அரசு சார்பாக காவல் உதவி ஆய்வாளர்,
அதிராம்பட்டிணம் காவல் நிலையம்
குற்ற எண்.180/2019 .... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

1.திருப்பதி (வயது –41/2026),
த/பெ. விஜயரெத்தினம்,
கரையூர் தெரு, அதிராம்பட்டிணம்,
பட்டுக்கோட்டை தாலுக்கா,
தஞ்சாவூர் மாவட்டம்.
2. ஹரிஹரன் (வயது –35/2026),
த/பெ. விஜயரெத்தினம்,
கரையூர் தெரு, அதிராம்பட்டிணம்,
பட்டுக்கோட்டை தாலுக்கா,
தஞ்சாவூர் மாவட்டம்.

.... எதிரிகள்.

**வழக்கு சுருக்கம்**

| வ.எண் | விவரங்கள் | விளக்கம் |
|---|---|---|
| 1) | வழக்கு எண் | 40/2022 |
| 2) | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | அதிராம்பட்டிணம் காவல் நிலையம், 180/2019 |
| 3) | எதிரியின் பெயர், தந்தை பெயர் மற்றும் வயது, தொழில், முகவரி, | 1.திருப்பதி (வயது –41/2026),<br>த/பெ. விஜயரெத்தினம்,<br>கரையூர் தெரு, அதிராம்பட்டிணம்,<br>பட்டுக்கோட்டை தாலுக்கா,<br>தஞ்சாவூர் மாவட்டம்.<br>2. ஹரிஹரன் (வயது –35/2026),<br>த/பெ. விஜயரெத்தினம்,<br>கரையூர் தெரு, அதிராம்பட்டிணம்,<br>பட்டுக்கோட்டை தாலுக்கா,<br>தஞ்சாவூர் மாவட்டம். |
| 4) | சம்பவம் நடைபெற்ற நாள் | 30.08.2019 |
| 5) | புகார் அளித்த நாள் | 31.08.2019 |

| | | |
|---|---|---|
| 6) | கைது செய்த நாள் | AB<br>AB |
| 7) | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 27.09.2019<br>27.09.2019 |
| 8) | அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்கு அனுப்பிய தேதி | --- |
| 9) | விசாரணை தொடங்கிய தேதி | 16.06.2024 |
| 10) | விசாரணை முடிவுற்ற தேதி | 07.03.2026 |
| 11) | தீர்ப்பு அல்லது உத்தரவு | அரசு தரப்பில், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான 294(b),448,324,506(2)இதச ன் கீழான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி மெய்பிக்க தவறிவிட்டனர் என முடிவு செய்து சந்தேகத்தின் பலனை குற்றம் சாட்டப்பட்டுவர்களுக்கு நல்கி குற்றவாளிகள் இல்லை என்று கு.வி.மு.ச பிரிவு 248(1) விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது. |
| 12) | தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்குதல் | ஆம் |
| 13) | காலதமதத்திற்கான காரணம் | குற்றப்பத்திரிக்கை 25.07.2022–ம் தேதி அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 25.07.2022 ம் தேதி அன்று இந்நீதிமன்றத்தால் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது. இவ்வழக்கீன் தீர்ப்புரை 11.03.2026ம் தேதி அன்று திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது. |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 25.07.2022–ம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் இன்றையதினம் 11.03.2026–ம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, குற்றமுறையிடுபவர் தரப்பில் திரு.j.சரவணகுமார்., எம்.ஏ.பி.எல்., அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களும், எதிரிகள் தரப்பில்., திரு. V.சிவா.,பி.எஸ்.சி.எல்.எல்.பி., அவர்கள் முன்னிலையாகியும் வழக்கு ஆவணங்கள், சாட்சியங்கள் அனைத்தும் பரிசீலனை செய்து இன்று வழங்கும்,

## தீர்ப்புரை

### 1. குற்றப் பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:

குற்றமுறையீடுபவரால் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக 294(b),448,324,506(2) இதச வின் குற்றத்திற்காக எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 2. நகல் வழங்குதல் மற்றும் குற்றச்சாட்டு வனைதல்:

எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அரசு தரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக எதிரிக்கு பிரிவு 207 குவிமுச வின் கீழ் வழங்கப்பட்டது.

3. ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகள் மீது குற்றம் பற்றி வினவுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால், எதிரிகளின் மீது பிரிவுகள் 294(b),448,324,506(2)இதச வின் படி வனைந்து, குற்றச்சாட்டு பற்றி தமிழில் விளக்கி வினவிய போது குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தம்மிச்சையாக மேற்கண்ட குற்றச்சாட்டை மறுத்ததால் வழக்கானது அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

### 4. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–

இவ்வழக்கின் குற்றம் சாட்டப்பட்ட திருப்பதி, ஹரிஹரன் என்பவரும் குடிபோதையில் கடைக்கு வந்து எய் கொசு வர்த்தி கொடுடா என்று கேட்டு தேவடியா மகனே குச்சிக்காரி மகனே என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டியும், பஞ்சிங்க மிஷினை எடுத்து வீசி காயத்தை ஏற்படுத்தியும், கல்லை எடுத்து தோள்பட்டை மற்றும் தலையில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தியும், எதிரிகள் வாதியை பார்த்து என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தற்காகவும், இச்சம்பவம் தொடர்பாக மேற்படி குற்றம் சாட்டப்பட்டவர்க்கு எதிராக அதிராம்பட்டிணம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை பெற்று அதிராம்பட்டிணம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் முதல்

தகவல் அறிக்கை பதிவு செய்து அதனை புலன் விசாரணைக்கு வைக்கப்பட்டது. பின்பு வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்தை பார்வை இட்டு சாட்சிகளை விசாரித்து, குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மேற்படி பிரிவுகளின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த 30.08.2019–ந் தேதி இரவு சுமார் 08.45 மணியளவில் வாதி கடையில் பொட்டலம் போட்டு கொண்டு இருக்கும் போது எதிரிகள் கடைக்கு குடிபோதையில் வந்து ஏய் கொசு வர்த்தி கொடுடா என்று கேட்டு தேவடியா மகனே, குச்சிக்காரி என்று அசிங்கமான வார்த்கைளால் பேசியும், பஞ்சிங் மிஷினால் வீசியும், வாதியை கையால் அடித்தும், எடை கல்லை எடுத்து தோள்பட்டை மற்றும் தலையில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தியதற்காகவும்,எதிரிகள் வாதியை பார்த்து என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காகவும், எதிரிகள் மீது 294(b),448,324,506(2) இதச வின் கீழும் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கில் அசா.1 முதல் 5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளன. அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு சான்று பொருள் ஏதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அசா.1 மற்றும் அசா.4 வரையிலானவர்கள் அரசு தரப்பு வழக்கிற்கும், கு.வி.மு.ச. பிரிவு 161(3) ன் படியான வாக்குமூலத்திற்கும், முரணமாகவும் சாட்சியம் அளித்துள்ளனர்.

<u>6. அரசு தரப்பு சாட்சியங்களின் சாட்சிய சுருக்கம்:</u>

அ.சா.1 திரு. மஸ்தான்கனி புகார்தாரர் தனது சாட்சியத்தில், சுமார் 06 ஆண்டுகளுக்கு முன்பு இரவு 08.45 மணியளவில், நான் எனது மளிகை கடைக்கு முன்பு நின்று பேசிக்கொண்டிருந்த போது யாரோ தங்களை சத்தம் போட்டுக்கொண்டு பின்னால் இருந்து தள்ளிவிட்டார்கள். அதில் நான் கீழே விழுந்து விட்டதாகவும் நான் எழுந்து திரும்பி பார்ப்பதற்குள் ஓடிவிட்டார்கள். யார் தள்ளினார்கள் என்று எனக்கு தெரியாது. அங்கு வந்த அதிராம்பட்டிணம் போலிசார் எழுதி வைத்திருந்த பேப்பரில் கையெப்பாம் பெற்றுக் கொண்டனர்கள். அந்த புகார் மனுவில் உள்ள கையொப்பம்

அ.சா.ஆ.1 என்னுடையது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.2 திரு. ரிலாவூதின் கண்ணுற்ற சாட்சியாக முன்னிடப்பட்டுள்ளனர். அவர் தனது சாட்சியத்தில், வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது. எந்த சம்பவத்தையும் பார்க்கவும் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.3திரு. மாரிமுத்து மற்றும் அ.சா.4 திரு. தனகுமார் பார்வை மகசர் சாட்சிகளாக முன்னிடப்பட்டுள்ளார்கள், அவர் தங்களது சாட்சியத்தில், சுமார் 06 ஆண்டுகளுக்கு முன்பு சொந்த வேலையாக அதிராம்பட்டிணம் காவல் நிலையம் சென்ற போது போலிசார் எழுதாத வெள்ளை தாளில் கையெழுத்து வாங்கினார்கள்.அதில் உள்ள கையொப்பம் முதலாவது மற்றும் இரண்டாவது கையெழுத்து அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 என்னுடையது. போலிசார் தங்களை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்கள் .

அ.சா. 5.திரு. மதியழகன் (உதவி ஆய்வாளர்) தனது சாட்சியத்தில் 31.08.2019 ம் தேதி காலை 08.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்த போது அ.சா.1 மஸ்கான் என்பவரிடம் புகார் மனு அ.சா.ஆ.4 பெற்று குற்ற எண்.180/2019, ச/பி. 294(b),448,323,324,506(2) இதச வின் கீழ் அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 பதிவு செய்துள்ளார். அன்றையே தினமே வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 09.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகளின் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் அ.சா.ஆ.6 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 தயார் செய்து சாட்சிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ சாட்சிகள் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை கைது செய்ய தேடிய போது, எதிரிகள் தஞ்சை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. பின்பு ஜார்ஜ் ராஜா உதவி ஆய்வாளர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அ.சா.1க்கு சிகிச்சை அளித்த அதிராம்பட்டிணம் அரசு மருத்துவமனை மருத்துவர் சீனிவாசன் என்பவரிடம் வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.8

பெற்றுள்ளார். அ.சா.1 சிகிச்சையில் இருந்து தானாக சென்றால் காயச்சான்றிதழ் வழங்கவில்லை. எனவே, இறுதியாக வழக்கை புலன் விசாரணைக்கு முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான அம்சங்களை தொகுத்து கு.வி.மு.ச.பிரிவு 313(1) (ஆ) வின் படி வினவிய போது குற்றம் சாட்டப்பவர் அவற்றை பொய் சாட்சியம் என மறுத்தார். குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் முன்நிறுத்தப்படவில்லை.

**7.தீர்வு:–**

இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவெனில், எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

அரசு தரப்பின் குற்றம் சாட்டப்பட்டவர்கள் வாதியை அசிங்கமாக திட்டியும், அடித்து காயத்தை ஏற்படுத்தியும், கொலை மிரட்டல் விடுத்தற்காகவும், இவ்வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இருதரப்பும் கேட்கப்பட்டது, ஆவணங்களும், சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்களும் பரிசீலிக்கப்பட்டது. அசா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்கள் சம்பவம் குறித்து போலிசார் விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வாக்குமூலம் கொடுத்து விட்டு தற்போது குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக பிறழ் சாட்சியமாக மாறி சாட்சியம் அளித்துள்ளனர். அரசு தரப்பு வழக்கறிஞர் அசா.5 மூலமும் அரசு சான்றாவணம் மூலமும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டு மெய்பிக்கப்ட்டுள்ளது என்று வாதிட்டார்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் தரப்பில் எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கபடவில்லை என்று வாதிட்டார்.

இந்நிலையில் அசா.1, முதல் அசா.4, சாட்சியங்களின் சாட்சியம் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மெய்பிக்கும் வகையில் அமைந்துள்ளதா? என பரிசீலனை செய்வது அவசியமாகிறது. அசா.1, வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபராக முன்னிலை படுத்தப்பட்டுள்ளார். மேற்படி சாட்சி அரசு தரப்பில் முதல் விசாரணை செய்யப்பட்ட போது சம்பவத்தில் ஈடுபட்ட நபரை பார்க்க வில்லை என்றும், அ.சா.2 கண்ணுற்ற சாட்சி எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அரசு தரப்பில் மேற்படி சாட்சிகள் பிறழ்சாட்சியங்கள் என குறிப்பிட்டு நீதிமன்ற அனுமதியை பெற்று குறுக்கு விசாரணை செய்துள்ளன. மேற்படி சாட்சியங்கள் அரசு தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தின் போது குற்றச்சாட்டு பற்றி ஏதுவும் தெரியாது என்றும், அரசு தரப்பு குறுக்கு விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்டவர் சம்பவத்தில் ஈடுபட்டதாக புகார் மனுவில் தெரிவித்து புலன் விசாரணை அதிகாரியின் வாக்குமூலம் கொடுத்ததாக குறிபிட்டுள்ளனர் என்பது தெரிய வருகிறது. எனவே மேற்படி சாட்சியம் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

எனவே, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அசா.5 மற்றும் புலன் விசாரணை அதிகாரியான சாட்சியம் மட்டுமே வைத்து குற்றம் சாட்டப்பட்டவர் தான் குற்ற இறுதி அறிக்கையில் விபரிக்கப்பட்ட குற்ற செயலில் ஈடுபட்டார் என முடிவு செய்ய இயலாது. எனவே, பாதிக்கப்பட்ட நபராக முன்னிடப்பட்டுள்ள மேற்படி அசா.1, அ.சா.2–ன் சாட்சியம், அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் மாறுப்பட்டு முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், குற்ற இறுதி அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளவாறு எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்டிருக்க கூடுமா? என்ற சந்தேகம் எழுகிறது.

எனவே, அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகனை மெய்பிக்கும் வகையிலான நம்பும்படியான சாட்சியத்தை முன்னிட தவறிவுள்ளதால், அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றசாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்க தவறியுள்ளார் என்று முடிவு செய்கிறது.

**8.முடிவாக**,

அரசு தரப்பில், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான பிரிவுகள் 294(b),448,324,506(2) இதச வின் கீழான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி மெய்பிக்க தவறிவிட்டனர் என முடிவு செய்து சந்தேகத்தின் பலனை குற்றம் சாட்டப்பட்டுவர்களுக்கு நல்கி குற்றவாளிகள் இல்லை என்று கு.வி.மு.ச பிரிவு 248(1) விடுதலை செய்து தீர்ப்பளிக்கிறது.

ii) இந்த வழக்கின் தடயப்பொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

iii) இவ்வழக்கில் எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

/இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாள் புதன் கிழமை ஆகிய இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது./

SUDHARSAN T

Digitally signed by SUDHARSAN T
Date: 2026.03.11 17:50:01 +0530

நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை

அரசு தரப்பு சாட்சிகள்

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. மஸ்தான்கனி |
| அ.சா.2 | திரு. ரிலாவூதின் |
| அ.சா.3 | திரு. மாரிமுத்து |
| அ.சா.4 | திரு. தனபால் |
| அ.சா.5 | திரு. மதியழகன்(உதவி ஆய்வாளர்) |

அரசு தரப்பு சான்றாவணங்கள்

| | |
|---|---|
| அ.சா.ஆ1 | 31.08.2019ம் தேதியிட்ட புகார் மனுவில் உள்ள கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | 31.08.2019ம் தேதியிட்ட பார்வை மகசரில் உள்ள முதலாவத கையெழுத்து |
| அ.சா.ஆ.3 | 31.08.2019ம் தேதியிட்ட பார்வை மகசரில் உள்ள இரண்டாவது |

| | |
|---|---|
| | கையெழுத்து |
| அ.சா.ஆ.4 | 31.08.2019ம் தேதியிட்ட புகார் மனு |
| அ.சா.ஆ.5 | 31.08.2019ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.6 | 31.08.2019 ம் தேதியிட்ட பார்வை மகசர் |
| அ.சா.ஆ.7 | 31.08.2019 ம் தேதியிட்ட மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.8 | 31.08.2019 ம் தேதியிட்ட விபத்து பதிவேட்டு நகல் |

அரசு தரப்பு சான்றுபொருள்– இல்லை

எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப் பொருட்கள் – இல்லை

SUDHARSAN T

Digitally signed by SUDHARSAN T
Date: 2026.03.11 17:50:07 +0530

நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.